# குமரி அறிவியல் பேரவை இளம் விஞ்ஞானிகள் தேர்வு புவிகோள் பாதுகாப்போம் விழிப்புணர்வு கருத்தரங்கம் நாகர்கோவிலில் நடக்கிறது

— x —

குமரி அறிவியல் பேரவை சார்பில் 2009-2010 க்கான இளம் விஞ்ஞானிகள் தேர்வுக்காக 'புவிகோள் பாதுகாப்போம்' என்னும் பொருளில் 8வது, 9வது படிக்கும் பள்ளி மாணவ மாணவியர்களுக்காக நடத்துகிறது.

சூரிய மண்டலத்தின் மூன்றாவது கோள் பூமி, இதனை புவிகோள் என்று அழைக்கப்படுகிறது. உயிர்கள், புல் பூண்டுகள் தாவரங்கள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் என வாழ்வதால் இதனை உயிர்கோளம் என்றும் அழைக்கப்படுகிறது. உயிர்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து வாழ்கிறது. நாகரிக மனிதர்கள் உண்ண உணவு, உடை, இருப்பிடம் பயன்பாடுகள் அனைத்தும் இந்த உயிர்கோளத்திலிருந்து பெறப்படுகிறது. நிலம், நதி, கடல், மலை, அண்டவெளி அடங்கிய உயிர்கோளம் தூய காற்று, சீரான வெப்பம் அனைத்தும் பண்டைய காலமாக சீராக இயங்கிவந்தது.

மனிதனின் நாகரிக வளர்ச்சியும், கல்வியறிவும் அதிகரிக்க கண்டுபிடிப்புகள் மூலம் நுகர்வு தன்மையும் அதிகரித்தது. அதனால் உருவான தொழில்புரட்சி கிடைக்கும் எரிசக்தி வாயிலாக வாகனங்கள், குளிர்சாதன வசதிகள், பிளாஸ்டிக் பயன்பாடுகள் முதலியவற்றால் கார்பன் வெளியேற்றம் அதிகரித்தது. வனங்கள் அடர்த்தி குறைக்கப்பட்டும் நீர்நிலைகள் ஆக்கிரமித்தும் உயிர்கோளம் பெரும் விளைவுகள் சந்தித்து வருகிறது. பூமிவெப்பமடைதலும் இதனால் பனிப்பாறைகள் உருகுதலும் அதனால் கடல்மட்டம் உயருதலும் புயல் சூறாவெளி போன்ற கடும் விளைவுகள் ஏற்பட்டு வருகின்றன. தொற்றுநோய்கள், வெள்ளப்பெருக்குகள் பஞ்சம் பட்டினி போன்றவை பிரதிபலித்துவருகின்றன. இந்த உயிர்கோள விளைவுகளைத் தடுக்க மனிதனும் இணைந்து செயல்பட வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம்.

SAVE THE PLANET
SAVE OURSELVES



பூமி அறிவியல் பேரவை இந்த தொலைநோக்குப் பணியை பல வருடங்களாக மாணவர்களிடையே முன்வைத்து செயல்பட்டு வருகிறது.

கழிவு மேலாண்மை, நீர்சக்தி மேலாண்மை, பருவநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் என ஒவ்வொரு தலைப்புகளில் ஒவ்வொரு ஆண்டும் செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டு புவி கோள் பாதுகாப்பு என்னும் பொருளில் விழிப்புணர்வை ஏற்படுத்த முனைந்து செயல்பட்டு வருகிறது.

இதற்காக நான்கு குழுக்கள் அமைத்து அணிக்கு ஒரு அறிவியல் அறிஞர், ஒரு மருத்துவர், ஒரு சமூக ஆர்வலர் இரண்டு வழிகாட்டி ஆசிரியர்கள் என குழுக்கள் அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த இருக்கிறது

இதற்காக அறிஞர்கள் சந்திக்கும் கருத்துரையாடலும் நிகழ்ச்சியை ஜூன் 21 ஆம் தேதி நாகர்கோவிலில் நடத்துகிறது. ஜூலை 11 ஆம் தேதி நாகர்கோவில் புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வைத்து ஒருநாள் கருத்தரங்கம் நடத்துகிறது. ஒரு பள்ளியிலிருந்து 8 வது, 9 வது படிக்கும் மாணவ மாணவியர் 5 பேரும் அறிவியல் ஆசிரியர்கள் 2 பேரும் கலந்து கொள்ளலாம். கலந்து கொள்ளும் மாணவ மாணவியர்களுக்கு சான்றும் வழங்கப்படும்.

மேலும் இவ்வாண்டு இளம் விஞ்ஞானிகள் தேர்வுக்கான அடிப்படைத் தகுதியானவர் மாணவர்கள் புவியில் ஆர்வம் உடையவராகவும், திட்ட அறிக்கை, அறிவியல் செயல்விளக்கம், வரைபடம் தயாரித்தல் போன்ற மூன்று தேர்வுகளில் பங்கேற்பவராகவும் தேர்வு பெற்ற பின் பிற பயிற்சிகளிலும் கலந்து கொள்ள பெற்றோர்கள் ஒத்துழைப்பு கிடைப்பவராகவும் இருக்க வேண்டும்.

மரம் நடுதல், புவி பாதுகாப்பு பிரச்சாரம் மேற்கொள்ள, நீர்சக்தி மேலாண்மை, பிளாஸ்டிக் பயன்பாட்டினைத் தவிர் விழிப்புணர்வு பணிகளில் கழிவு மேலாண்மை போன்ற பங்கேற்ற அனுபவம் குறித்து தலைமையாசிரியர் சான்றுடன் கலந்து கொள்ள வேண்டும்.

கருத்தரங்கில் நிலம், புவிக்கோள் தோற்றம்
மண்வகைகள், மண் அடுக்குகள், கனிமங்கள், தட்டுமேலோடுகள்
நிலநடுக்கம், எரிமலை, புவிவெப்பமடைதல் பருவநிலை
மாற்றம் அதனால் ஏற்படும் நோய்கள் மற்றும்
நதிகள் உற்பத்தியாதல், நீரோடைகள், ஆற்றுப்படுகைகள்
அணைக்கட்டுகள் அரிப்புகள் ஏற்படுதல் அதன்விளைவுகள்
மலைத்தொடர்கள், ஆழ்துளைகிணறுகளால் ஏற்படும் அபாயம்
போன்றவையும்.

கடல்கள் தோற்றம், கடற்பரப்புகள், கடல் உயிரினங்கள்
கடல்போக்குவரத்துகள், கடல்கோள், ஆழிப்பேரலை, கடலில்
கலக்கும் கழிவுகள், கழிவுகளால் கடல்மட்டம் உயருதல் போன்ற
வைகளும்.

மலைத்தொடர்கள், மலைவாசம், வன அடர்த்தி, உயிரியல்
வகைமை, விலங்குகள், பறவைகள் நீராதாரம் போன்றவைகளும்
வான்வெளி, ஓசோன் அடுக்குகள், துருவபாதை, புவிவட்டபாதை
தட்பவெப்பம், காலநிலை, கோள்கள் வான்வெளிப்பயணம்
செயற்கைகோள், ஏவுதளங்கள் மற்றும் ஒருங்கிணைந்த
புவிகோள்பாதுகாப்பு போன்ற பல்வேறு சிந்தனைகளில்
பயிற்சிகள் வழங்கப்படும்.

இறுதிக்கட்டமாக பயிற்சிபெற்ற மாணவர்கள் புவிகோள்
பாதுகாப்பு பற்றிய ஒருபக்க அறிக்கையும் அதன்பின்னர்
பள்ளிகளிலிருந்து கலந்துகொள்ளும் அறிவியல் ஆசிரியர்களுக்கு
திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பயிற்சி வழங்கப்படும்.
திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான மாதிரிகளும் வழங்கப்படும்.
திட்ட அறிக்கையினை அறிஞர்கள்
12 பக்க திட்ட அறிக்கையினை அடுத்த கட்டமாக
மேடையில் விளக்கவேண்டும். விளக்கமளிக்க வேண்டும். பின்னர்
உறைபடம் தயாரித்து விளக்கமளிக்க
அறிவியல் செயல்விளக்கம் வடிவமைத்து விளக்கமளிக்க
வேண்டும்.

ஒவ்வொருகட்டதேர்விலும் ஆர்வமுடன் கலந்துகொண்டு
சிறப்பு பெறுபவர்கள் இடம்பெற்றவர்கள் பரிசுக்கு
தேர்வு செய்யப்படுவர்.

SAVE THE PLANET
SAVE OURSELVES



தேர்வு செய்யப்பட்ட 50 மாணவர்களை 10 பேர்கள் வீதம் 5 குழுக்களாகப் பிரித்து நிலம், நீர், கடல், மலை, அண்டவெளி என அணிகள் அமைத்து வழிகாட்டி ஆசிரியர்கள் துறை வல்லுநர்கள், அறிவியல் அறிஞர்கள், மருத்துவர்கள் என இணைந்து இயற்கை விவசாயம் ஆய்வுகள், கள ஆய்வுகள், தகவல் தொடர்பு, நேர மேலாண்மை, ஒருங்கிணைத்தல், தயாரித்தல் ஆவணப்படுத்துதல், வெளிப்படுத்தல், ஈடுபாடு போன்ற பல்வேறு பல்வேறு செயல்பாடுகளில் சிறந்து விளங்கி பெரும் விடுமுறை நாட்களில் ஆய்வுப்பணியில் ஈடுபடுவர் இறுதியில் தங்கள் அணிகளின் தயாரிப்புகளை ஒருங்கிணைத்து நூலாக வெளியிடுவர்.

தன்னார்வமாக செயல்படும் இந்த குழுக்கள் தனித்தியங்கும் சொந்த முயற்சி, வெளிப்படை என்ற முறையில் செயல்படும் நீர்வள ஆய்வுகள், கடலோர ஆய்வுகள், மணல் ஆய்வுகள் துறையறிஞர்கள் முதலியவற்றில் மிக்க பயன் பெறும்.

அறிவியல் அறிஞர்களாக இஸ்ரோ சார், பால்வண்ணன் ராமசேஷன், முருகன், பெஞ்சமின்ராஜன் ஆகியோரும் கல்வியாளர்களாக கோபால், ஜோஸ்பிரகாஷ், ஆண்டனி மேரி டேவிட், சதீஷ்குமார் ஆகியோரும் மருத்துவ ஆலோசகர்களாக டாக்டர் விஜயகுமார், டாக்டர் ஜெயபால், டாக்டர் அருண்பிரகாஷ் டாக்டர் சுரேஷ் ஹெர்பர்ட் ஆகியோரும் அறிவியல் ஆலோசகர்களாக கேப்டன் பெஞ்சமின், பேராசிரியர் ஜேம்ஸ் வில்சன், ஜோசப் ராஜேந்திரன், ஜேசுபோஸ், தியாகராஜ் மாவட்ட வன அலுவலர் சுந்தரராஜு ஆகியோரும் இடம் பெறுவர். கருத்தாளர்களாக சகாயம், ஜெஸ்லின்பிரான்சிஸ் ராஜன், ஜெயக்குமார், ஜான்சன், திருவேங்கடம், அல்போன்ஸ் ராபர்ட்குமார், செல்வசாமி, திருநெல்வேலி வக்கீல்கள் அருணாசலம், ராமதுரை ஆகியோர்கள் இடம் பெறுவர்.

ஒருங்கிணைந்த பணிக்கு பள்ளிகள், கல்லூரிகள் நிறுவனங்கள், பத்திரிகைகள், தகவல் தொடர்பு நிறுவனங்கள் ஒத்துழைப்புடன் செயல்படும்.

SAVE THE PLANET
SAVE OURSELVES



பங்கேற்கும் மாணவர்கள் பெயர் விவரங்கள் தொலைபேசி எண்ணுடன் தலைமையாசிரியர் பரிந்துரைக் கடிதத்துடன் ஜூன் 26 ஆம் தேதிக்கு முன்னர் தகவல் தெரிவிக்க வேண்டும் முளங்குழி பா. லாசர், அமைப்பாளர் குமரி அறிவியல் பேரவை, முளங்குழி [illegible] அஞ்சல் 629162 என்ற முகவரியில் தெரிவிக்க வேண்டும் மேலும் தகவல் பெற இரவு 8 மணிக்கு மேல் 9942758333 என்னும் செல்பேசியில் தொடர்பு கொள்ளலாம் என குமரி அறிவியல் பேரவை அமைப்பாளர் முளங்குழி பா. லாசர் தெரிவித்தார்.


(கையொப்பம்)
முளங்குழி பா. லாசர்
அமைப்பாளர்
குமரி அறிவியல் பேரவை
முளங்குழி, [illegible] அஞ்சல்
குமரி மாவட்டம் 629162
Cell 9942758333